1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப்படையிலே தான் முன்னோடித் திட்டமாக செவிலிமேட்டிலே இப்படித் திட்டம் அமைக்கப்பட்டது. அது உருவான பலன் தருமானால் அந்த மாவட்டத்திலே பல இடங்களிலும் வேறு மாவட்டங்களிலும் விரிவுப்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

அரிசனங்களுக்கு வீடுகள்

*336 வினா—திரு ந. தருமலிங்கம் :—மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு சற்று அதிகப் பரப்பளவுள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை கட்டப்பட்டு வந்த வீடுகள் 96 சதுர அடி பரப்பளவு உடையனவாக இருந்தது. நடப்பு நிதியாண்டிலிருந்து இதை 177 சதுர அடியாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, இப்பொழுது கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் எல்லாம் கணவன் மனைவிகூட வாழ வசதியில்லாத முறையில் அமைந்திருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து அகலமான வீடுகளாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைத்தான் நான் சொன்னேன். 96 சதுர அடி பரப்பளவுள்ளதாக இருந்தது இப்பொழுது 177 சதுர அடி பரப்பளவாகவும் 940 ரூபாய் வரையில் செலவழிக்கப்பட்டது இப்பொழுது 1,600 ரூபாய் வரையில் உயர்த்தபட்டும் இருக்கிறது. ஆகவே கூடுதலாகச் செலவழித்து அதிகப் பரப்பளவுள்ள வீடுகளைத்தான் நாம் கட்டிக் கொடுக்கிறோம்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டுக்கு முன்பு அரிசனங்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் பரப்பளவு என்ன? இப்பொழுது கட்டிக்கொடுக்கின்ற வீடுகளின் பரப்பளவு என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமான குறிப்பு அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது இல்லை.

*337 வினா—திரு இரா. இராமலிங்கம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக 1971–72ஆம் ஆண்டு எவ்வளவு தொகை நெல்லை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூபாய் 44,000.

(இ) 64 வீடுகள்.

திரு இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, அதிகமான அரிசனங்கள் வீடுகள் கட்ட விரும்புகிறார்கள். ஆகவே அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கி அதிக அளவுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் கூடுமான அளவுக்கு நிதி ஒதுக்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம்தான் இன்னும் இதற்கு எந்தவித மான உதவியும் செய்ய முன்வரவில்லை.

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 44 ஆயிரம் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை தேவைக்குத் தக்கபடி போகாதபடி இருக்கிறது. அது மட்டுமல்ல, வீடுகள் கட்டுவதற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை. அரசாங்கம் பணம் ஒதுக்கி இதைச் செய்வதைக் காட்டிலும் ஹவுஸிங் போர்டு மாதிரி இதற்குத் தனியாக ஏற்படுத்தி வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட புதிய திட்டத்தை இந்த ஆண்டு முதல் துவக்கியிருப்பதைப்பற்றி நான் பட்ஜெட் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்கு தனியாக ஒரு கார்ப்பரேஷன் அமைக்கிறோம். அதிலே கடன் தருவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது சிண்டிகேட் பேங்க் மூலமாகவோ கடன் உதவிபெற்று மக்களுக்குத் தருவதற்கான குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மாநில அரசு மத்திய அரசிடம் ஏதாவது நிதி கேட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்ட சில டிசைன்களைக் கேட்டார்கள். அவற்றையும் நாம் வரையறுத்துக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஒப்புதல் அளித்த பிறகு அதற்கான தொகையை நாம் பெற வேண்டும். இன்னும் அவர்கள் இது பற்றி முடிவு எடுக்காமல் இருக்கிறார்கள்.

1972 ஆகஸ்ட் 25]

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister when the Housing Corporation would be started ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: எல்.ஐ.சி. மூலமாகக் கடன் உதவி கேட்டபொழுது அவர்கள் இப்பொழுது அப்பொழுது என்று சொல்லி கடைசியாக செப்டம்பர் மாதத்திலே பேச்சுவார்த்தை தொடங்குவதாக இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து அவர்கள் இல்லையென்றால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறோம். அவர்கள் 1 கோடி ரூபாய் கடன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எல்.ஐ.சி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் இல்லை என்று முடிவாகக் சொல்லி விட்டால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சுவார்த்தை நடத்தியபிறகு முடிவு எடுக்க இருக்கிறோம்.

பெரியதாளை ஆளிப்பாறை

*338 வினா—திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், பெரியதாளை கடலில் இருக்கிற ஆளிப்பாறையை (coral reaf) உடைத்து, மீனவர்களுக்கு வசதியான வழி துலக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கல்

*339 வினா—திரு. தி. ஓ. பெரியசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கும் திட்டம் அவிநாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதம்தான் அமுல்படுத்தப்பட்டது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், காலதாமதத்தை தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இத்திட்டம் அவினாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பே அமுல் நடத்தப்பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தட்டப்பாறை மைனர் சிறைச்சாலை

*340 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—